திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
24-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

திருச்சிற்றம்பலம்

திருப்பனந்தாள் தலவரலாறு

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

திருவுள்ளத்தின்படி

திருப்பனந்தாள்

ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது.

1943

[விலை அணா 2.

பொருளடக்கம்

	பக்க எண்
தலமும் இருப்பிடமும்	1
தலப் பெயர்கள்	,,
கோயிலமைப்பு	2
மூர்த்திகள்	5
தலப்பெருமை	,,
புராணவரலாறு	6
தீர்த்தங்கள்	12
தலவிருட்சம்	14
வழிபட்டோர்கள்	15
சுற்றுக் கோயில்கள்	,,
மண்டபங்கள்	,,
சிற்பங்கள்	16
நித்திய பூஜைகளும் திருவிழாக்களும்	18
சொத்துக்கள்	19
திருப்பணி	20
சமயப்பணி	21
நிர்வாகம்	,,
கல்வெட்டுக்கள்	22
திருப்பாடல்கள்	23

திருச்சிற்றம்பலம்

திருப்பனந்தாள் தலவரலாறு

1. தலமும் இருப்பிடமும்

சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம் மேனியம்மான் ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறும்பொருட்டு, கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் தலங்கள் பல. அவைகளுள் சோணாட்டில் காவிரியின் வடபால் விளங்கும் அறுபான் மும்மைத் தலங்களுள் **திருப்பனந்தாள்** என்பதும் ஒன்று. கும்பகோணத்தி(குடமூக்கி)ற்கு வடகிழக்கே 11-கல் தொலைவிலும், ஆடுதுறைக்கு வடக்கே 6-கல் தொலைவிலும் உள்ளது. தலத்தின்வடபால் 3-கல் தொலைவில் கொள்ளிட நதியின் முக்கியமான லோயர் (கீழ்) அணைக்கட்டு இருக்கிறது. ஆங்காங் கும் பஸ், வண்டி முதலிய வசதிகள் உள.

2. தலப்பெயர்கள்

தலவிருட்சம் பனை. ஆதலின் **பனசை** எனவும், **பனந்தாள்** எனவும் பெயர்கள் வழங்கப்

படுகின்றன. வடமொழிப் பெயர் **தாலவனம்** (தாலம்-பனை). ஆயினும் தாடகை பூசித்தமையால் ஆலயம் **தாடகை யீச்சரம்** என்று வழங்கப்படு கின்றது. 'தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே' என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் அருள்மொழி.

3. கோயிலமைப்பு

கோயில் ஊரின்நடுவே மிகஅழகிய தோற்றத் துடன் விளங்குகிறது. உயர்ந்த மதில்களால் சூழப் பெற்றது. கீழ்புறமும், மேல்புறமும் சிற்பங்கள் செறிந்த இராஜகோபுரங்களுடன் கூடிய வாயில் கள் விளங்குகின்றன. கோயிலின் உட்புறம் இரண்டு பிராகாரங்களும், மதிலின் புறத்தே மடவளாகமும், அழகிய நீண்ட வீதிகளும் இருக் கின்றன. இறைவன் சந்நிதானம் மேற்குமுகமாக வும், இறைவி சந்நிதானம் கிழக்குமுகமாகவும் விளங்குகின்றன. சுவாமிக்கும், அம்மையாருக்கும் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. மேலைக்கோபுர வாயிலின் உள்நுழைந்ததும் 16 கால் மண்டபம் இருக்கிறது. அதன் வடபுறம் வாகனமிருக்கு மிடமும், அதன் கீழ்பால் நாககன்னிகை தீர்த்த மும் உள்ளன. தீர்த்தம் தென்புறம் திருமாளிகைப் பத்தியோடு கூடிய படிக்கட்டும், மற்ற மூன்று புறமும் சாதாரண படிக்கட்டும் அமைந்து விளங்கு கிறது. அத்திருமாளிகைப் பத்தியில் மேல்புறம் நாக

கன்னிகையம்மனும், கீழ்புறம் இலிங்கப்பிரதிட்டை யும் இருக்கின்றன. 16 கால் மண்டபத்தின் தென் பால் களஞ்சிய அறையும், தேவஸ்தான காரி யாலயமும் நூல்நிலையமும் ஒன்ருக அமைந்த கட்டிடமும் இருக்கின்றன. கீழ்பால் பலிபீடமும், அதனடியில் விநாயகரும் துவஜஸ்தம்பமும், நந்தி மண்டபமும் விளங்குகின்றன. அப்பிராகாரத்தில் வடகீழ் மூலையில் யாகசாலை இருக்கிறது.

இரண்டாங் கோபுரத்திற்குள் சென்றதும் வெளவால் நெற்றி மண்டபம் விளங்குகிறது. இப் பிராகாரத்தைத் திருமாளிகைப்பத்தி மண்டபங் கள் அழகு செய்கின்றன. இத்திருச்சுற்றில் கீழ்ப் பக்கத்தில் தலவிருக்ஷமும், அதன் பக்கத்தில் தாடகை பூசைசெய்த ஐதிகத்தில் அமைந்த இலிங்கப் பிரதிட்டையும்இருக்கின்றன. அங்கு ஒரு கிணறு * இருக்கிறது. வடகிழக்கு மூலையில் ஓர் யாகசாலையும் இருக்கிறது. தென் திருமாளிகைப் பத்தியில் சமயாசாரியர்கள் பிரதிட்டையாகி இருக் கின்றனர். அப்பிராகாரத்தில் கிழக்கு நோக்கிய சந்நிதானத்துடன் ஆண்ட விநாயகர் ஆலயம் அமைந்திருக்கிறது. ஆஸ்தான மண்டபத்தில் ஊர்த்துவதாண்டவ மூர்த்தி பிரதிட்டையாகி இருக் கிறது.

---

* இது நாககன்னிகை பிலம்—இதன்வழியாக நாககன்னியர் வந்து பெருமானை வழிபட்டதாக ஐதிகம்.

சுவாமி கோயில் வடமேற்கு மூலையில் சுப்பிரமணியர் (மூலவர்) நடராஜர்சபை, முத்துக்குமார சுவாமி (உற்சவர்), இலக்குமி, கலைமகள் ஆகிய மூர்த்திகள் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றனர். கீழைப் பிராகாரத்தில் பஞ்சபூத இலிங்கங்கள், பைரவர், சூரியன், சந்திரன், தென்கிழக்கு மூலையில் காட்சி கொடுத்த நாயனார், தென் பிராகாரத்தில் அறுபான்மும்மை நாயன்மார், பிராமியாதி சப்தமாதாக்கள், உத்ஸவ மூர்த்திகள், மேல் பிராகாரத்தில் சோமாஸ்கந்தர் ஆகியோர்கள் எழுந்தருளியிருக்கின்றனர்.

சுவாமி கர்ப்பக்கிரகத்தின் வடபக்கத்தில் துர்க்கை அழகிய விமானத்துடன் விளங்குகிறது. கீழ்புறம் தனி ஆலயத்தில் சண்டேசரும், தென்புறம் தக்ஷிணாமூர்த்தியும் பிரதிட்டையாகியிருக்கின்றனர்.

சுவாமி கர்ப்பக்கிர விமானம் பிரணவாகாரமாக மூன்றுஸ்தூபியுடன் விளங்குகிறது.

அம்மையார் ஆலயத்தின் உட்பிராகாரத்தில் நான்கு மூலையிலும் நான்கு விநாயகரும், வடக்குப் பிராகாரத்தில் சண்டிகேசுவரியும், பிரதிட்டையாகி இருக்கின்றன. சந்நிதானத்தில் ஆடிப்பூர அம்மனும், பள்ளியறையும் விளங்குகிறது.

4. மூர்த்திகள்

இறைவன் திருநாமங்கள்:— அருணஜடேஸ்வரர், செஞ்சடைவேதியர், செஞ்சடையப்பர், செஞ்சடைநாதர், ஜடாதரர், சடையப்பர், தாலவனநாதர். இறைவி திருநாமங்கள்:— பிரகந்நாயகி, பெரியநாயகி, பெரியபெருமாட்டி, தாலவனநாயகி. குங்கிலியக்கலயர் மனைவி தனையனுடன் (உற்சவர்) இருக்கின்றது.

5. தலப்பெருமை

உமையம்மையார் சிவபூசை யியற்றி ஞானோபதேசம் பெற்றது. தாழைமலரைச் சான்றுகொண்டு திருமுடியைக் கண்டதாகப் பொய்கூறிய பிரமனுக்கு அதனாலேற்பட்ட பாதகத்தைப் போக்கியது. இந்திரனுக்கு விருத்திராசுரனைக் கொன்ற பாதகமும், கௌதமர் மனைவியைக் களவாற் சேர்ந்த தோஷமும் போக்கி அருள்பாலித்தது. பிருந்தையைப் புணர்ந்த திருமாலுக்கு அருள்செய்தது. தக்கனுடன் கூடி சிவத்துரோகத்தில் ஈடுபட்ட சூரியனுக்கு அத்துரோகத்தால் உண்டான பாவத்தைத் தீர்த்தது. குருபத்தினியைக்கூடின சந்திரனுக்கு மாபாதகத்தைப் நீக்கியது. அகத்தியரால் பூசித்து வழிபடப்பெற்றது. ஆதிசேடனால் பூசிக்கப்பெற்றது. தாடகையியற்றிய சிவபூசையின் பொருட்டுத் திருமுடி சாய்ந்திருந்த இறைவனை குங்கிலியக்கலய நாயனார் அன்புக் கயிற்றால்

இழுத்து நிமிர்த்தி வழிபட்டது. வாசுகியின் மகளாகிய சுமதி என்னும் நாககன்னிகையால் பூசிக்கப் பெற்றது. மேற்கூறிய ஒவ்வொருவரும் தத்தம் பெயரால் தீர்த்தங்கள் அமைத்து சிவலிங்கப் பிரதிட்டையும் செய்துள்ள பெருமைமிக்கது. அவ்வத்தீர்த்தங்களில் அன்போடு மூழ்கினர்களுக்குப் பவப்பிணிமாய்த்துப் பெரும்பேறடையச் செய்வது.

6. புராணவரலாறு

அம்மையார் ஞானேபதேசம் பெற்றது:— முன்னெரு கற்பத்தில் அம்மையார் இறைவனை வணங்கி 'ஞானேபதேசம் புரிந்தருளல் வேண்டும்' எனப் பிரார்த்திக்க, இறைவன் "நீ தாலவனம் சென்று எம்மைப் பூசித்தால் அருள் செய்வோம்" என்றுரைத்தனர். அம்மையாரும் இறைவன் ஆணைப்படி இத்தலத்துவந்து எதிர்முகமாக வடபுறத்தமர்ந்து தவஞ்செய்தாள். இறைவன் காட்சியளித்து அம்மையாருக்கு ஞானத்தை உபதேசித்து அருள்செய்தனர். இவ்வுண்மையினையே இறைவர் மேற்கு முகமாக எழுந்தருளியிருப்பதும், இறைவி கிழக்கு முகமாக எழுந்தருளியிருப்பதும் வலியுறுத்தும். அம்மையார் உபதேசம் பெறுமுன் **பாலாம்பிகை** எனவும், உபதேசம் பெற்றபின் **பிரகந்நாயகி** எனவும் பெயர் வழங்கப்பெறுகின்றார்.

ஐராவதம்:— அசுரர்கள் அல்லலுக்கு ஆற்றாகிய அமரர்கள் ஓடிவந்து இந்திரனிடம் முறை

யிட்டார்கள். செவியேற்ற இந்திரன் 'போர்புரிதற்கு ஐராவதத்தைக் கொண்டு வருக,' எனப்பணிக்க ஏவலாளர்கள் தேடிக்காணாது மயங்கினர். ஐராவதம் போகத்தை விரும்பி மண்ணுலகத்துள்ள மந்தர மலையை அடைந்திருக்கிறது என உணர்ந்தனன் இந்திரன். தனது சமயத்துக்கு உதவாத காரணத்தால் "தெய்வவலி யிழந்து காட்டானையாகுக" எனச் சபித்தனன். ஐராவதமும் மண்ணுலகத்தில் காட்டானையாகத் திரிந்தது. தன்னெதிர்ப்பட்ட நாரதரை வணங்கி, அவராணைப்படியே இத்தலத்திற்கு வந்தது. தாலவன நாதரை வணங்கித் தன் சாபத்தைப் போக்கிக்கொண்டது. தன் பெயரினல் மேல் பால் ஓர் தடாகமும், சிவலிங்கப் பிரதிட்டையும் செய்து பூசித்துத் தன்னுலகடைந்தது.

தாடகை:— ஓர் அசுரமகள். மகப்பேறு விரும்பித் தவமியற்றுங்கால், பிரமதேவன் தோன்றி "நீ தாலவனஞ் சென்று பூசித்து வழிபட்டால் விரும்பிய பேற்றைப் பெறுவாய்" எனப் பணித்தனன். தாடகையும் அவ்வாறே இத்தலத்திற்கு வந்து நியமந் தவறாது விதிப்படி இறைவனைப் பூசித்துவந்தாள். ஒருநாள் பூசைமுடிவில் மாலையைச் சாத்த எழுந்தகாலத்து அன்பை வெளிப்படுத்திவிடும்படி இறைவன் அவளுடைய ஆடையை நெகிழச் செய்தனன். தாடகையும் ஆடையை இரு முழங்கைகளாலும் இடுக்கிக்

கொண்டு, "அண்ணலே! யாது செய்வேன்; எவ்வாறாயினும் இம் மாலையை ஏற்று அடியேனை ஆதரித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். இறைவனும் தன் திருமுடிசாய்த்து மாலையினை ஏற்றுக் கொண்டனன். உடனே அவளுக்குப் பதினாறு கரங்கள் தோன்றின. அவளும் பெருமானது கருணையை வியந்து தோத்தரிக்கப் பெருமானும் இடபாரூடராய்க் காட்சிதந்தனன். அப்போது அவள் பணிந்து வணங்கி "அடியேனுக்கு மகப்பேறு அளிப்பதோடு அடியேனுக்குத் தேவரீர் அருள்பாலித்ததை யாவரும் நினைவு கூர்தற்காக இத் தலத்துக்கு அடியேன் பெயர் வழங்கிவர வேண்டும்" என விண்ணப்பித்தனள். பரமனும் 'அவ்வாறே ஆகுக' எனப்பணித்து மறைந்தனன். தாடகையும் ஆலயத்திற்கு வடபால் ஓர் தீர்த்தமமைத்துத் தென் கரையில் வீரியம்மனையும், கீழ்கரையில் வைரவரையும் காவலாகப் பிரதிட்டித்து வணங்கி மகப்பேற்றையும் அடைந்தாள்.

குங்கிலியக்கலயர்:– திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் அவதரித்தவர். நாடோறும் இறைவனது சந்நிதானத்தில் குங்கிலியதூபம் இடும்பணி யியற்றி வந்ததால் இவர் குங்கிலியக்கலயர் என்று அழைக்கப் பெற்றார். அவருக்குத் திருவருளால் வறுமையுண்டாகியும் தம்பணியில் தவறினாரல்லர். ஒருநாள் அவர் மனைவியார் உணவு சமைத்தற்கு ஒன்றும் இல்லாமையால் தம்மிடம் எஞ்சியிருந்த திருமங்கிலி

யத்தைக் கணவர்கையில் கொடுத்து 'உணவுப் பொருள் வாங்கிவாரும்' என்றனர். நாயனரும் அதனை வாங்கிக்கொண்டு செல்லுங்கால் இறைவன் ஓர் குங்கிலியவணிகன் போன்று பொதிகொண்டு எதிரேவந்தனர். அதனைக் கண்டார் நாயனர். மனமகிழ்ச்சி கொண்டார். சென்ற காரியத்தை மறந்தார். கையிலிருந்த திருமங்கிலியத்தைக் கொடுத்துப் பொதியை வாங்கிக்கொண்டு ஆலயத் திற்குச் சென்று பணியியற்றிக் கொண்டிருந்தார். அன்றிரவு இறைவன் அருளால் வீடு மாளிகை யாயிற்று; செல்வங்கள் நிறைந்தன; உணவுப் பொருள்கள் மிகுந்தன; மனைவியாரும் விழித் தெழுந்து திருவருளை வியந்து கணவருக்கு உணவு அமைக்க முற்பட்டார். நாயனரிடத்தில் தோன்றி "நீ வீடுசென்று பசி நீங்குக" என அருள்செய் தார் இறைவர். நாயனரும் வீடுசென்று எல்லாவற் றையுங் கண்டு இறைவன் கருணையை வியந்து ஆனந்தபரவசராயினர்.

நாயனர் இவ்வாறு சிவப்பணிசெய்து கொண் டிருக்க சோழ அரசனுகிய வீரசேனனென்பவன், இத்தலத்திறைவன் தாடகையின் அன்புக்காகத் தலைசாய்ந்திருப்பதைக் கேள்வியுற்று இறைவன் திருமுடியை நிமிர்த்தி வழிபட எண்ணினன். யானை குதிரை முதலியவைகளைக் கட்டி இழுப்பித்தான். முயற்சி பயனளித்திலது. கவலைக்கடலில் ஆழ்ந் தான். இச்செய்தி கடவூர்க்கலயருக்கு எட்டியது.

இத் தலத்திற்கு வந்தார். தாமும் அத்திருப்பணியில் ஈடுபடவிரும்பினர். யானைகளை அவிழ்க்கச்செய்து தம் கழுத்தில் அரிகண்டமும் இறைவர் கழுத்தில் மெல்லியகயிறும் பூட்டி இழுத்தார். அரிகண்டம் கழுத்தை அறுக்கத் தொடங்கியது. உடனே பெருமான் தமது திருக்கரத்தைத்தோற்றி, சிரசின் மீது வைத்தருள, அறுபட்ட சிரசும் பொருந்தியது. இறைவன் திருமுடியும் நிமிர்ந்தது. அதுகண்ட அரசன் அன்புக்கயிற்ருல் நாயனர் இழுத்து நிமிர்த்ததைக் கண்டான்; வணங்கினன். எண்ணி எண்ணி வியந்தான். விடைபெற்றுச் சென்ருன்.

பின்னொருநாள் நாயனர் இறைவருக்கு ஆவுடையார் செய்து சாத்த நினைத்து, அளவெடுத்துக் கொண்டு, மலைநாடுசென்று ஆவுடையாரைச்செய்து வந்து சாத்த, இறைவர் தம் திரு உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டார். அது அளவுகுறைந்து சாத்த முடியாமற் போயிற்று. உடனே நாயனர் "எண்ணிய காரியம் முடிவுபெற வில்லையே; இனி உயிர்விடுதலேமேல்" என்று துணிய இறைவர் தாம் எக்கிக்கொண்டு அதனை யேற்று அருள்பாலித்தார்.

அவ்வமயம் தனது மகன் இறந்த செய்தி தெரிந்து வீடு சென்று இதுவும் திருவருட் செயல் போலும் என எண்ணி மகனை எடுத்துக்கொண்டு ஈமக்கடன் முடிக்கச் சென்ருர். வழியில் உள்ள

† விநாயகர் அசரீரியாக அருளியபடி, நாயனர் அவ் வுடலைக் கொண்டுவந்து நாககன்னிகை தீர்த்தத் தில் நனைக்க, மகனும் உயிர்பெற் றெழுந்தான். இவ்வாருக நாயனர் சிலகாலம் இங்குத்தங்கி இறை பணி யியற்றிப் பின்னர் தம் ஊருக்கேகினர்.

நாககன்னிகை:— நாகலோகத்தில் வாசுகி தன்மகள் சுமதிக்கு மணஞ்செய்விக்கக் கருதிய காலை, சுமதி "அதைப்பற்றிய முயற்சி தங்கட்கு வேண்டாம்" எனக் கூறி, கன்னிமாடத்தமர்ந்திருந் தாள். இறைவன் அவளது கனவிற்றேன்றி "நீ தாலவனமடைந்து பூசிப்பாய்" என அருள் செய்தனன். சுமதியும் அவ்வாறே பிலத்தின் வழி யாக வந்து அம்மையார் சந்நிதானத்திலுள்ள கூபத் தில் தோன்றி இறைவனை வழிபட்டு வந்தாள். தலயாத்திரை செய்துவரும் அரித்துவசன் என்னும் அரசனும் இத்தலத்தை யடைந்தான். சுமதி அவனைக்கண்டு விருப்பமுற்று, நாகலோகத்திற்கு அழைத்துச்சென்று மணஞ்செய்து கொண்டாள். சிலநாள் அங்கிருந்து மீண்டும் பிலத்தின்வழியாக வந்து அம்மையாருக்கு மேல்புறம் ஓர் தடாக மமைத்து நாடோறும் வழிபாடியற்றி வந்தாள். அரித்துவசனும் ஆலயத்திற்குத் தென்பால் ஓர் தடாகமும் இலிங்கமும் அமைத்தான். இவ்வாறு

---

† இன்றும் "பிணமீட்ட விநாயகர்" என்ற திருநாமத் துடன் திருவீதியின் வாயு மூலையில் எழுந்தருளியுள்ளார்.

இருவரும் இறைவனைப் பூசித்துப் பல திருப்பணி களும் செய்து முத்தியின்பம் பெற்றார்கள்.

சங்குகன்னன்:— இவன் வேட்டுவர் தலைவன். நாரதர் ஆணைப்படி இத்தலத்து வந்து, தீர்த்தங் களில் நீராடி, தாலவன நாதரைப் பூசித்து, விரும் பியபடி மகப்பேற்றை யடைந்தான்.

நாகுகன்னன்:— இவன் அந்தணர் குலத்தில் உதித்தவன். பிதிர்க்கடனுக்காக வைத்திருந்த பொருள்களைஅபகரித்ததால் நரகத்துன்பமடைந்து இறுதியில் வேட்டுவனாகப் பிறந்தான். வழிப் போவார் பொருள்களைக் கவர்ந்து உயிர்வாழ்ந்து வந்தான். ஒருநாள் தலயாத்திரை செய்துவரும் முனிவர்களுடைய பொருள்களை அபகரிக்க எண்ணி அவர்களைப் பின்தொடர்ந்து வந்தான். இத் தலத் தெல்லைக்கு வந்ததும் நல்வினைப் பயனாலே வந்த காரியத்தை மறந்து மூன்றுநாள் தாலவனநாதரைப் பூசித்துத் திருவாதிரைத் திருநாளன்று சிவலோகம் சார்ந்தான்.

7. தீர்த்தங்கள்

பிரம தீர்த்தம், ஐராவத தீர்த்தம், தாடகை தீர்த்தம், விட்டுணு தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், ஆதிசேட தீர்த்தம், அரித்துவச தீர்த்தம், நாககன்னிகை தீர்த்தம், தருமசேன தீர்த்தம், கூப

தீர்த்தம், மண்ணியாறு முதலாகிய பல தீர்த்தங்கள் ஆலயத்தின் உள்ளும் புறம்பும் இருக்கின்றன.



நாககன்னிகை தீர்த்தம்

நாககன்னிகை தீர்த்தம்:— சுவாமி சந்நிதியில் மேலை இராஜ கோபுரத்தின் வடபால் கோயிலுக்குள் அமைந்துள்ளது. நாககன்னியரால் தோற்றுவிக்கப் பெற்றது. இதில் மூழ்கினோர் சகல பிணிகளும் நீங்கப்பெறுவர்.

மண்ணியாறு:— அம்மையார் விருப்பின்படி முருகனுல் அழைக்கப்பட்டது. இறைவனது சந்நிதானத்தில் 2-பர்லாங் தொலைவில் வடக்கு நோக்கி ஓடுகின்றது.

8. தலவிருட்சம்



தலவிருக்ஷம் (பனை)

பனைமரம்:—

அது இரண்டாவது பிராகாரத்தில் அம்மையார் ஆலயத்தின் எதிரிலுள்ளது. இரண்டுமரங்கள் இருக்கின்றன. இதன்பக்கல் பெருமான் தாடகையினது அன்புக்கிரங்கி திருமுடி சாய்ந்து அருள்பாலித்த (அவசரம்) மூர்த்தமிருக்கிறது.

9. வழிபட்டோர்கள்

பிரமன், திருமால், இந்திரன், ஐராவதம், அகத்தியர், சந்திரன், சூரியன், ஆதிசேடன், நாக கன்னிகை, தர்மசேனன், எக்ஞுகுப்தன், தாடகை, குங்கிலியக்கலய நாயனார், சங்குகன்னன் முதலியோர் பலரும் வழிபட்டுப் பேறுபெற்றார்கள்.

10. சுற்றுக்கோயில்கள்

ஆலயத்திற்குத் தென்மேற்கு மூலையில் ஊருடையப்பர் கோயில் இருக்கிறது. மேலும் ஐயனார், மாரியம்மன் முதலிய தெய்வங்களுக்கும் சிறுசிறு கோயில்கள் இருக்கின்றன.

ஊருடையப்பர் ஆலயம் பிரமன் வழிபட்டது. பிரமனால் அலங்கரிக்கப்பட்ட அலங்காரங்களைச் சாபவிமோசனத்தை நீக்கிக்கொள்ள விரும்பிய ஐராவதம் அகற்றிவிட்டு வழிபட்டு வந்து. அதனைக் கண்டு கலக்கமுற்ற பிரமன் திருமாலைக் குறித்துத் தவமியற்றி அவரருளால் சிங்கமுகத்துடன் இம்மாடக்கோயிலை அமைத்து வழிபட்டு வேண்டியன பெற்றான். இந்த ஐதிகத்தில் இதன் மேற்கில் விஷ்ணு ஆலயம் ஒன்றும் அமைந்திருக்கிறது.

11. மண்டபங்கள்

அலங்கார மண்டபம், பெரிய வௌவால் நெற்றி மண்டபம், பதினாறுகால் மண்டபம், தீர்த்தவாரி

மண்டபம், வாகன மண்டபம் முதலிய பல மண்டபங்கள் இருக்கின்றன.

12. சிற்பங்கள்

பல்லவர்கள் கால வேலைப்பாடு உடையன. மிக அழகிய சிற்பங்கள் ஆங்காங்கும் காணப்படுகின்றன.

பதினாறுகால் மண்டபத்தில் தாடகையினால் சாத்தப்பட்ட மாலையினை ஏற்றுக்கொள்வதற்குப் பெருமான் திருமுடிவளைத்தருள்செய்ததும், அதனை நிமிர்த்தற்கு அரசன் யானைகளைக் கட்டி இழுத்ததும், அது நிமிராதது கண்டு குங்கிலியக் கலயர் தம்கழுத்தில் கயிறுகட்டி இழுத்ததும், அப்போது அவ்விலிங்கத்தினிடையே இறைவரது திருக்கரம் தோன்றியதும், உடனே நாயனார் தம் மனைவி மக்களுடன் வழிபட்டதுமான உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

சிங்கவாயிலினுள் நுழைந்ததும் வடபுறமதிலில் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றினை ஒட்டிச் சில உருவங்கள் அமைந்திருக்கின்றன.

சுப்பிரமணியர் உற்சவருக்குப்பின் தாடகை பெருமானை வழிபட்டுப் பதினாறு கைகள் பெற்ற ஐதிகம் செதுக்கப் பெற்றிருக்கிறது.



குங்கிலியக்கலையர் சரித்திரம்

இரண்டாங் கோபுரத்தினுள் நுழைந்ததும் வௌவால்நெற்றி மண்டபத்தில் சுதையினால்



பஞ்சமூர்த்திகள்

(பழங்கால வேலைப்பாடு) பஞ்சமூர்த்திகளும் வேலை செய்யப்பட்டிருக்கின்றன.

13. நித்தியபூஜைகளும், திருவிழாக்களும்

காரண, காமிக ஆகமப்படி ஆறுகால பூஜைகள் நாடோறும் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பிர்மோற்சவம் நடைபெறுகிறது. கந்த சஷ்டி, ஆடிப்பூரம் முதலியவிழாக்களும் நடத்தப் பெறுகின்றன.

ஆவணி அமாவாசையன்று பிரமன் பூசித்துப் பேறுபெற்ற ஐதிகத்தில் பெருமான் பிரமதீர்த்தத்

தில் தீர்த்தங்கொடுத்தருளுவர். மார்ச்சு, செப்டம்பர் மாதங்களில் சூரியன் பூசித்த ஐதிகத்தில் குறிப்பிட்ட நாட்களில் சூரிய கிரணங்கள் பெருமான் மீது படுகின்றன. அன்று பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.



தேர்நிலைகள்

கார்த்திகைத்திங்கள் சுக்கிரவாரத்தில் அம்மையார் நாககன்னிகை தீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருளுவர்.

14. சொத்துக்கள்

நன்செயில் 797-75 ஏக்கரும், புன்செயில் 294-66-ஏக்கரும் இருக்கின்றன. பதினைன்கு வீடுகள்

வாங்கப்பட்டிருக்கின்றன. வெள்ளியில் பல்லக்கு, இடபம் முதலிய வாகனங்கள் இருக்கின்றன. யானை வாகனம் முதலிய மரவாகனங்கள் வர்ணம் தீட்டி இருக்கின்றன. தேர் இரண்டு அவ்வூர் ஸ்ரீ காசி மடத்திலிருந்து அளிக்கப்பெற்றது. ஆலயத்திற்குப் போதுமான திருவாபரணங்கள் இருக்கின்றன. பழய வேலைப்பாடுள்ள கண்கவர் கண்ணாடி மயில் வாகனம் ஒன்றிருக்கிறது.

15. திருப்பணி

பிராகாரங்களில் தளவரிசை போடப்பட்டிருக்கிறது. மடப்பள்ளியின் பின்புறம் உள்ள கீழ்புறத் திருமதில் பழுதாயிருந்ததால் முழுமையும் இடித்துப் புதிதாகக் கட்டப்பட்டது. ஆஸ்தான மண்டபத்தில் கருங்கற்றளவரிசை போடப்பட்டது. நாககன்னிகை தீர்த்தம் சேறுவாரி படிக்கட்டுகளும் திருத்தப்பட்டன. தேர்நிலைகள் புதுப்பிக்கப் பட்டிருக்கின்றன. பசுமடம் தளவரிசை போடப் பட்டது. கட்டளை மடம் பூராவும் இடித்தெடுத்துப் பெருஞ்செலவில் நவீன முறையில் மிக அழகாகக் கட்டப்பட்டது. மட்டியூர் என்ற கிராமத்தில் செங் கழுநீர் ஓடை ஒன்று புதிதாக அமைத்து நாடோறும் பூஜைக்குச் செங்கழுநீர்ப் புஷ்பம் உபயோகமாகும் படிச் செய்யப்பட்டிருக்கிறது. தேவஸ்தான காரியாலயம், களஞ்சியம் முதலிய பழய கட்டிடங்களை இடித்தெடுத்து விட்டுப் புதிதாகக் கட்டப்பட்டு

வருகின்றன. நந்தவனத்திற்கும் சுற்றுச் சுவர் கட்டி இரும்பில் அழகான கதவுகள் போடப்பட்டிருக்கின்றன. புஷ்பச் செடிகளும் புதுப்பித்துப் போட்ப்பட்டிருக்கின்றன. முதல் இரண்டாம் சுற்று மதில் பூராவும் சிமிட்டி பூசப்பட்டிருக்கிறது. திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் சிமிட்டி பூசித் தளவரிசை செய்யப்பட்டிருக்கின்றன.

16. சமயப்பணி

சித்திரைவிழா, நவராத்திரிவிழா, ஆடிப்பூர விழா போன்ற திருநாட்களிலும் ஏனைய சிறப்பு நாட்களிலும் ஆதீனப் பிரசாரகர்களைக் கொண்டும், பல அறிஞர்களைக்கொண்டும் சமயச்சொற்பொழிவுகள் செய்விக்கப் பெறுகின்றன. "குங்கிலியக் கலயர் அன்பின்திறம்" என்னும் உரைநடைநூல் அச்சியற்றப்பெற்று வழங்கப்படுகின்றது. தல புராணம் அச்சிடப்பெற்று வருகின்றது.

17. நிர்வாகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன பரிபாலனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களுள் ஒன்று. ஆதீன கர்த்தரவர்களாக எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் ஆதீன கர்த்தா

ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்தது (26-6-33) முதல் இவ் வாலயத்தையும் பரிபாலனம் செய்து வருகின்றார்கள்.

18. கல்வெட்டுக்கள்

1908, 1914, 1932 ஆகிய வருஷங்களில் கவர்ன்மெண்டார் கல்வெட்டுப் பரிசோதகர்களைக் கொண்டு படி எடுத்திருக்கின்றார்கள். அதில் சில கல்வெட்டுக்கள் சரித்திரசம்பந்த முள்ளனவாகக் காணப்படுகின்றன. ஒருகல்வெட்டு இறைவன் கொள்ளிட நதிக்குத் தீர்த்தம்கொடுக்கப் போவதற்குப் புதிய பாதை ஒன்று அமைத்திருப்பதாகக் கூறுகின்றது.



நந்தவனம்

உ

திருப்பாடல்கள்

பண்—பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினன் றிகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

விரித்தவன் நான்மறையை மிக்க விண்ணவர் வந்திறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள் இய லேழுல கில்லுயிரும்
பிரித்தவன் செஞ்சடைமேல் நிறை பேரொலி வெள்ளந்தன்னைத்
தரித்தவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

உடுத்தவன் மானுரிதோல் கழ லுள்கவல்லார் வினைகள்
கெடுத்தருள் செய்யவல்லான் கிளர் கீதமொர் நான்மறையான்
மடுத்தவன் நஞ்சமுதா மிக்க மாதவர் வேள்வியைமுன்
தடுத்தவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக வேத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் புனல் பொங்கர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

விடம்படு கண்டத்தினன் இருள் வெள்வளை மங்கையொடும்
நடம்புரி கொள்கையினன் அவன் எம்மிறை சேருமிடம்
படம்புரி நாகமொடு திரை பன்மணி யுங்கொணரும்
தடம்புனல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

விடையுயர் வெல்கொடியான் அடி விண்ணொடு மண்ணுமெல்லாம்
புடைபட ஆடவல்லான் மிகு பூதமார் பல்படையான்
தொடைநவில் கொன்றையொடு வன்னி துன்னெருக் கும்மணிந்த
சடையவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

மலையவன் முன்பயந்த மட மாதையொர் கூறுடையான்
சிலைமலி வெங்கணையாற் புரம் மூன்றவை செற்றுகந்தான்
அலைமலி தண்புனலும் மதி ஆடரவும் அணிந்த
தலையவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

செற்றரக் கன்வலியைத் திரு மெல்விரலால் அடர்த்து
முற்றும்வெண் ணீறணிந்த திரு மேனியன் மும்மையினான்
புற்றர வம்புலியின் னுரி தோலொடு கோவணமுந்
தற்றவ னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

வின்மலை நாணரவம் மிகு வெங்கனல் அம்பதனால்
புன்மைசெய் தானவர்தம் புரம் பொன்றுவித் தான்புனிதன்
நன்மலர் மேலயனும் நண்ணு நாரணனும் அறியாத்
தன்மைய னூர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

ஆதர் சமணரொடும் மடை யைந்துகில் போர்த்துழலும்
நீத ருரைக்குமொழி யவை கொள்ளன்மின் நின்மலனூர்
போதவிழ் பொய்கைதனுள் திகழ் புள்ளிரி யப்பொழில்வாய்
தாதவி ழும்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

தண்வயல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரத்துக்
கண்ணய லேபிறையான் அவன் தன்னைமுன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழான் மிகு ஞானசம் பந்தனல்ல
பண்ணியல் பாடல்வல்லார் அவர் தம்வினை பற்றறுமே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

வீழி மிழலை வெண்காடு வேங்கூர்
வேதி குடி விசயமங்கை வியலூர்
ஆழி யகத்தியான் பள்ளி யண்ணா
மலையாலங் காடு மரதைப் பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடலுகைக் காரோ ணத்துங்
கயிலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

காமூன்றிக் கண்ணிடுங்கிக் கால்குலைய மற்றோர்
மாமூன்றி வாய்குதட்டா முன்னம்—புரமூன்றும்
தீச்சரத்தாற் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
வீச்சரத்தான் பாதமே ஏத்து.

—ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி எழிற்பனந்தாள்
சாய்ந்த சிவன்நிலைத் தான்என்பர் காதலி தாலிகொடுத்
தாய்ந்தநற் குங்கிலி யங்கொண் டனற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்கிட்ட தென்கட வூரிற் கலயனையே.

திருச்சிற்றம்பலம்.

—நம்பியாண்டார் நம்பிகள்.

திருச்சிற்றம்பலம்

இன்னிசை வண்டமிழ் பாடி யேத்தியர்
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந்தாள் வணங்கினர்.

திருச்சிற்றம்பலம்.

—சேக்கிழார்.

கொந்தார் மைக்குழ லிந்தார் சர்க்கரை
என்றே செப்பிய மொழிமாதர்
கொங்கார் முத்துவ டந்தா னிட்டத
னந்தா னித்தரை மலைபோலே
வந்தே சுற்றிவ ளைந்தா லற்பம
னந்தா னிப்படி யுழலாமல்
மங்கா நற்பொரு ளிந்தா வற்புத
மென்றே யிப்படி அருள்வாயே
இந்தோ டக்கதிர் கண்டோ டக்கட
மண்டா நற்றவர் குடியோட
எங்கே யக்கிரி எங்கே யிக்கிரி
என்றே திக்கென வருசூரைப்
பந்தா டித்தலை விண்டோ டக்களம்
வந்தோ ரைச்சில ரணகாளி
பங்கா கத்தரு கந்தா மிக்கப
னந்தா ளுற்றருள் பெருமாளே.

—அருணகிரிநாதர்.

அனையுமைக் கருண்ஞான வுபதேசம் வைத்தவன்
அயனுக்கு மருள்செய்தவன்
அணிகே தகைக்குமருள் செய்தவன் பைம்பொனுட்
டயிராவ தத்தையாண்டோன்

நினைவரிய தாடகைக் கருண்மேனி சாய்ந்தவன்
நிமிராமல் மன்னனுக்கு
நிறைகலைய ஞருக்கு முன்போல் நிமிர்ந்தவன்
நிறைகலைய ஞாளித்த

தனையனுயிர் போனபின் மீட்டநா யகன்வாகை
சாத்து*மா விடையார்தனைத்
தானெக்கி யேதரித் தூக்கொண்டு நீண்டசெஞ்
சடைவேதி யன்புதல்வனே

பனசையம் பதிமேவு தண்டீசர் ஐயனே
பவளவாய் முத்தமருனே
பைம்பொனிற வயிரா வதப்பிள்ளை யார்தம்பி
பவளவாய் முத்தமருளே.

—சிதம்பர முனிவர்.

விண்ணீரும்வற்றிப் புவிநீரும்வற்றி விரும்பியழக்
கண்ணீரும்வற்றிப் புலவோர்தவிக்கின்ற காலத்திலே
உண்ணீருண்ணீரென் றுபசாரம்பேசி யுண்மையுடன்
தண்ணீரும்சோறும் தருவான்றிருப்பனந் தாட்பட்டனே.

—காளமேகப் புலவர்.

---

* "மறையுடையாட னைத், தானத்தி யேதரித்து" எனவும் பாடம்.

ஐந்தருவும் வந்துநிறை தென்கடவூர் மேவுபே
ரன்புமிகு கலையனார்தாம்
அளித்தகுங் கிலியப் புகைக்குள மகிழ்ந்துசீர்
அளகையா கரன்றனக்குச்
சந்ததமும் உன்றனைப் போலநிதி யருளெனச்
சாற்றிக் கலைச்சிமானந்
தனக்குமணி முடிகுனிந் தருள்கலய னாரன்பி
னெல்நிமிர்ந் திட்டபொருளே
இந்தவித நின்கருணை கண்டுமன முருகிசெய்
யிசைத்திருப் பணிமுதலதா
யேற்றவபி ஷேகநை வேத்தியம தாதியா
யேத்தினர்கள் ஐயமின்றே
சிந்தையில் நினைத்தபடி இந்தவுல கிற்சகல
செல்வமும் பெறுவரன்றோ
தென்பனசை யம்பதி தழைந்திட வளர்ந்தருள்செய்
செஞ்சடை மகாலிங்கமே.

—செஞ்சடைவேதிய தேசிகர்.

சடையப்பார்மாலை

கலைவளர் மதியுங் கடுக்கையும் பாம்புங்
கவினுறு நதியையு மிலைந்த
தலைவளர் நினது திருவுரு வோடுந்
தமியனேன் காணவந் தருள்வாய்
முலைவளர் மடவார் சூழ்ந்திடும் பனசை
முதற்பெரும் பதியினி லிமய
மலைவளர் பெரிய நாயகி மகிழ
வாழ்சடை யப்பநா யகனே.

பரமொளிர் சோழ னாற்பெரும் படையிற்
பருவடம் பூட்டிமுன் னீர்த்துந்
திரமொளிர் நினது திருவுருக் கலையர்
திகழ்தர நிமிர்த்ததென் சொல்லாய்
கரமொளிர் கதிர்க ளேழ்நிலை மாடங்
கடப்பரி தாகிநிற் பனசை
வரமொளிர் பெரிய நாயகி மகிழ
வாழ்டை யப்பநா யகனே.

ஈசனே யடிய ரிருவினை நீக்கி
யின்கதி சேர்த்தருள் பாவ:
நாசனே மறைக ணான்கினும் விளைந்து
நல்லருட் பிழம்பென வாழும்
போசனே அடியேன் புரைமலந் தீர்த்தாள்
புகடவா சூழ்ந்திடும் பனசை
வாசனே பெரிய நாயகி மகிழ
வாழ்சடை யப்பநா யகனே.

தந்தையே நால்வர்க் கன்றெழின் ஞானந்
தந்தையே மாலய னாற்கு
முந்தையே வுயிர்க ளனைத்துளு மிருந்து
முந்தையே முனிவர்கள் மனம்வாழ்
சிந்தையே யடியேன் றீவினை யாவுஞ்
சிந்தையே பனசையில் வாழ
வந்தையே பெரிய நாயகி மகிழ
வாழ்சடை யப்பநா யகனே.

பெரியநாயகிமாலை

அன்றே ரிமைய வரைமக வாகி யமர்ந்தவருட்
குன்றே யடியன் வினைதீர்த் தருளெழிற் கூத்துகந்து
மன்றேய் பரமன் மகிழ்காம வல்லிமெய் மாதவர்சூழ்
நன்றேய் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே.

புத்தூரும் வல்லம் புலியூரு மரசடைப் புண்ணியனார்
சித்தூரு மாதவர் சேர்ந்தூர் கயிலைச் சிகரம்விட்டுப்
பித்தூ ரடிய னுளத்தூரில் வந்து பிறங்கியதேன்
நத்தூர் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே.

கல்லா மனத்துக் கடையேனை யாண்டு கருணைசெய
வல்லா யென்றுன் பதம்வந் தடைந்தேன் வினைமாற்றிடுவாய்
செல்லாங் குழல்மலர்ச் செவ்வாய் வரைகுயச் சிற்றிடைசேர்
நல்லாய் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே.

காட்டு மிரவியும் கண்ணையும் போலக் கலந்துயிரை
யாட்டும் பரம னகத்தா மரையி லழகொழுகத்
தீட்டு முயிரினல் லோவிய மேவினை தீரருளை
நாட்டும் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே.

—தருமபுர ஆதீன
ஸ்ரீமத் சண்முகத்தம்பிரான் சுவாமிகள்.